DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.I, CHIDAMBARAM.
**Present:Selvi.D.Nisha, M.L.,**
**Judicial Magistrate No.I., Chidambaram.**

| | |
|---|---|
| Case No. | CC.No.114/2016 |
| Deposition of Witness for Prosecution | PW: 9 (LW: 11 ) |
| Cr.No. and Police Station : | 371/2016 , அண்ணாமலை நகர் காவல் நிலையம் |
| Name: | திரு. ரமேஷ்ராஜ் (துணை கண்காணிப்பாளர்) |
| Father's /Husband Name: | த.பெ.சுந்தரமூர்த்தி |
| Village: | |
| Taluk: | |
| Caste | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| **Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 27.05.2024** | |

Accused present.

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2016 ம் ஆண்டு நான் அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியிலிருந்த சமயம் 07-09-2016 ந் தேதி மதியம் 15.00 மணியளவில் கிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவில் தலைமைக்காவலர் திருமேனி குற்ற எண்.371/2016 பிரிவுகள் 279, 304(A), இ.த.ச வின் கீழ் அ.சா.ஆ.5 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் . நான் அயல் பணியாக 07.09.2016 ந் தேதி வெளியில் இருந்ததால் 08.09.2016 காலை 6.00 மணிக்கு விசாரணைக்காக வழக்கு கோப்பினை என் வசம் ஒப்படைத்தார். நான் அன்றைய தினமே வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஜெயபால் மற்றும் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். அவை முறையே **அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7** ஆகும், மேற்படி ஜெயபால் மற்றும் செந்தில்குமார் ஆகியோரை விசாரணை செய்தேன். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்கள் சாட்சிகளாக இருக்க பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் வைத்து இறந்துபோன

கிருஷ்ணவேணியின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.ச.ஆ.8, பின்னர் இறந்தவரின் இறப்பிற்கான மருத்துவரீதியான காரணத்தை அறிந்து பிரேதத்தை தலைமைக் காவலர் 2161 திருமேனி என்பவர் மூலமாக பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். 25.10.2016 ந் தேதி மதியம் 3.00 மணிக்கு எதிரி விநாயகமூர்த்தி என்பவர் வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனம் TN51W2893 TVS XL என்ற வாகனத்துடன் ஆஜர் ஆனவரை கைது செய்து தாக்க பிணையில் விடப்பட்டது. மேற்படி விபத்து ஏற்படுத்திய வாகனத்தை வாகன ஆய்விற்காக வேண்டுகோள் கடிததத்துடன் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்காக அனுப்பி வைத்தேன். பிறகு 01.11.2016 அன்று மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் இளமுருகன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.9. பிறகு பிரேத பரிசோதனைச் செய்த மருத்துவரிடம் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று அவரை விசாரித்து அவரது வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். **மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை ஆ.சா.ஆ.10 ஆகும்.** அந்த தலைமைக் காவலர் திருமேனி என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். இந்த வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இ.த.ச பிரிவுகள் படி இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். **(மேற்படி அ.சா.ஆ,9 மற்றும் அ.சா.ஆ,10 ஆவணங்கள் அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 294 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு எதிரி தரப்பில் ஆட்சேபனையின்றி குறியீடு செய்யப்பட்டன.)**

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியானது 06.09.2016 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையானது 07.09.2016 ந் தேதி பதிவானது என்றால் சரிதான். எனது விசாரணை 08.09.2016 அன்று விசாரணை தொடங்கப்பட்டது என்றால் சரிதான். இறந்துபோனவர் நடந்து சென்றுக்கொண்டிருக்கும் போது பின்புறமாகத்தான் வாகனம் இடித்து சென்றது என்றால் சரிதான். இறந்ததுபோனவரும் அவருடன் நடந்து வந்த அ.சா..1 புகார்தாரர் கிருஷ்ணன் என்பவரும் வடக்கு நோக்கி நடந்து சென்றார் என்றால் சரிதான். சாலையின் இருபக்கமும் மணல் சாலை இருந்தது என்றால் சரிதான். சாலையிலிருந்து தங்கமணி என்பவரது வீட்டிற்கு இடையில் 15 அடி இடைவெளி இருந்தது என்றால் சரிதான். அந்த சாலையானது சீர்காழி- சிதம்பரத்தை இணைக்கும் பிரதான சாலை என்றால் சரிதான். 2016 ம் வருடத்தில் இந்த இரண்டு இடங்களுக்கும் செல்வதற்கு

அதிகப்படியாக போக்குவரத்து பயன்படுத்தப்பட்டு வந்தது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து அண்ணாமலைநகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட ஒரு சோதனை மையம் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் சோதனை மையத்திற்கும் இடையே அரைகிலோமீட்டர் இருக்கும் என்றால் சரிதான். புகார்தாரர் அ.சா.1 ன் வாக்குமூலத்தில் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்தார் என்றும் அல்லது ஓட்டுநரை என்னால் அடையாளம் காட்ட இயலும் என்று கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தின் போது எதிரிக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததாக மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் இருந்தது என்றால் சரிதான். ஆய்வறிக்கையில் வாகனத்தை ஆய்வு செய்த போது எந்த ஒரு சேதமும் ஏற்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளனர் என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதியிலிருந்து ஒன்றரை மாத காலம் கடந்த பின்னர் தான் 01.11.2016 அன்று வாகனத்தை ஆய்வு செய்துள்ளனர் என்றால் சரிதான். காலதாமதமாக வாகனத்தை ஆய்வு செய்ததற்கான காரணத்தை நான் எங்கும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்சரிதான். சம்பவ சமயத்தில் மற்ற விசாரணை அதிகாரிகள் இருந்தனர் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. அடிப்பட்ட நபர் ராஜா முத்தையா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்றால் சரிதான். அங்கு தான் முதல் சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த விபத்து பதிவேடு வழக்குகோப்பில் உள்ளதா என்றால் உள்ளது சரிதான். விபத்து பதிவேட்டில் அந்த பெண்மணி சாலையை கடக்கும் போது விபத்து நடைபெற்றது என்றால் சரிதான்.விபத்து பதிவேட்டினை பதிவு செய்த பணி மருத்துவரை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டன என்றால் சரியல்ல. இவ்வழக்கின் விசாரணையை நான் சரிவரமேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் மீது ஒரு பொய்யான குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open Court in the presence of the accused read over of the witness and Admitted by him/her to by correct.

(Sd/-Selvi.D.Nisha)
J.M.No.I, Chidambaram